Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.81/2019

**P.W**. 1(LW1)

| | |
|---|---|
| Name | : திரு. பாலசுப்பிரமணியம் |
| Father/Husband Name | : திரு, பக்கிரிசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மேலகோட்டையூர் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்த துரைசாமி என் மாமனார் ஆவார்.

2) கடந்த 01.07.2018ம் தேதி இரவு 8.45 மணியளவில் பூஞ்சேரி அருகே உள்ள சால்ட் கம்பெனியில் வேலைக்காக சென்றுக் கொண்டிருந்த போது பூஞ்சேரி சமுதாயக்கூடம் அருகே நடந்து வந்தபோது கார் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். போன் மூலம் நான் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தேன். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலம் என் மாமனாரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்து குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடமானது இருட்டான பகுதி என்றால் சரிதான். விபத்து குறித்து கேள்விப்பட்டு தான் நான் சென்று புகார் கொடுத்தேன்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.